

We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## மார்ச் - 2020

We Are Here..!! To Guide You..!!



# WeShine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## மார்ச் - 12.03.2020


Main Office @

**WeShine Study Circle**

Chrompet, Chennai

Phone: 8939144344, 8939244344

Branch Office @

**WeShine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- சர்வதேச நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- வர்த்தக நிகழ்வுகள்





We Shine Academy



# சர்வதேச நிகழ்வுகள்

- சிகாகோ தமிழ்ச் சங்க பொன்விழா: 2019ஆம் ஆண்டில் ஐம்பது ஆண்டுகளை நிறைவு செய்யும் பொன்விழா ஆண்டாக கொண்டாடப்பட்டது. இந்த ஐம்பது ஆண்டுகளில் சங்கத்திற்காக அரும் பாடுபட்ட முன்னாள் செயற்குழு உறுப்பினர்களைச் சிறப்பிக்கும் விதமாக விருந்தளித்து, சங்க வளர்ச்சிக்காக அவர்களின் மேலான ஆலோசனைகள் பெறப்பட்டது.
  - **தமிழ்நாடு அரசின் உயரிய விருதான 'தமிழ்த் தாய் விருது'- 2019 சிகாகோ தமிழ்ச் சங்கம் பெற்றது.**
  - **செய்தி துளிகள்:**
    - தமிழ்நாடு அரசின் ஆழ்ந்த பரிசீலனைக்குப்பின் சிகாகோ தமிழ்ச் சங்கத்தின் பணிகள் மிகச் சிறப்பானதாகக் கருதி தேர்வு செய்தனர்.
    - புலம் பெயர் மண்ணில், சிகாகோ தமிழ்ச் சங்கம் தான் இத்தகைய விருது பெறுவதற்குத் தேர்வு பெற்ற முதல் தமிழ் அமைப்பாகும்.

- **கொரோனா வைரஸ் ஒரு தீவிர தொற்றுநோய் என்று உலக சுகாதார அமைப்பு (WHO) அறிவித்துள்ளது.** ஒரு தீவிர தொற்றுநோய் என்பது ஒரே நேரத்தில் உலகெங்கிலும் பல நாடுகளில் பரவி வரும் ஒரு நோயாகும்.
  - கடந்த இரண்டு வாரங்களில் சீனாவுக்கு வெளியே உள்ள



We Shine Academy™

நாடுகளில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது என்று **உலக சுகாதார அமைப்பின் தலைவர் டொக்ரர் ரெட்ரோஸ் அடனோம் கெப்ரியசுஸ்** (Dr Tedros Adhanom Ghebreyesus) தெரிவித்துள்ளார்.

- **செய்தி துளிகள்:**
  - அவசர மற்றும் கடுமையான நடவடிக்கை எடுத்து வைரஸ் பரவுவதன் போக்கை மாற்றுமாறு அவர் அரசாங்கங்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார். இந்த வைரஸை அடக்கிக் கட்டுப்படுத்த முடியும் என்பதை பல நாடுகள் நிரூபித்துள்ளன என்றும் அவர் கூறினார்.

- அமெரிக்காவில் இந்த ஆண்டு நடைபெறவிருக்கும் அதிபர் தேர்தலுக்கான **ஜனநாயகக் கட்சி வேட்பாளரைத் தேர்ந்தெடுப்பதற்காக 3 மாகாணங்களில் நடைபெற்ற வாக்கெடுப்பில் முன்னாள் துணை அதிபர் ஜோ பிடன் (77) வெற்றி** பெற்றுள்ளார்.
  - இதையடுத்து, போட்டியில் அவருக்கு அடுத்த இடத்திலுள்ள வெர்மான்ட் மாகாண எம்.பி. பெர்னி சாண்டர்ஸை (78) விட அவர் அதிக முன்னிலை பெற்றுள்ளார்.
  - **செய்தி துளிகள்:**
    - அமெரிக் ஜனாதிபதிகளின் பட்டியல்
    - ஜனவரி 20, 2001 - ஜனவரி 20, 2009 ஜார்ஜ் டபிள்யூ புஷ்
    - ஜனவரி 20, 2009 – ஜனவரி 20, 2017 பராக் ஒபாமா
    - ஜனவரி 20, 2017 டொனால்டு டிரம்ப்

## விளையாட்டு நிகழ்வுகள்

- **ஜோர்டானில் நடைபெற்ற ஆசிய ஒலிம்பிக் தகுதிச்சுற்றுப் போட்டியில் காயம் காரணமாக இறுதிச்சுற்றில் விளையாடாமல்** விலகியதை அடுத்து, **இந்திய குத்துச்சண்டை வீரர் விகாஷ் கிருஷண் வெள்ளி** வென்றார்.
  - உலக சாம்பியன்ஷிப், ஆசிய விளையாட்டுப் போட்டி ஆகியவற்றில் பதக்கங்கள் வென்றவரான விகாஸ் 69 கிலோ எடைப்பிரிவில் ஆசிய ஒலிம்பிக் தகுதிச்சுற்றில் பங்கேற்றார்.
  - இவருக்கு கண்ணுக்கு அருகே காயம் ஏற்பட்டிருப்பதால், இறுதிப் போட்டியில் விளையாட முடியவில்லை. இதனால், ஜோர்டான் வீரர் ஜெயத் ஈஷாஷை அவரால் எதிர்கொள்ள முடியவில்லை.
  - **செய்தி துளிகள்:**
    - டோக்கியோ ஒலிம்பிக் போட்டிக்கு இந்திய குத்துச்சண்டை வீரர் மணீஷ் கௌசிக் (63 கிலோ) தகுதி பெற்றார்.
    - இவர் ஒலிம்பிக்குக்கு தகுதி பெற்ற 9-ஆவது இந்திய குத்துச்சண்டை வீரராவார்.

## வர்த்தக நிகழ்வுகள்

- **இந்திய பங்குச்சந்தைகள்** இன்று **கடும் வீழ்ச்சியுடன்** தொடங்கியுள்ளன. **மும்பை பங்குச்சந்தை சென்செக்ஸ் 1,590 புள்ளிகள் சரிந்து** 34,106-ல் புள்ளிகளில் வர்த்தகமாகிறது. தேசிய பங்குச்சந்தை குறியீட்டெண் நி.்.ப்டி 500 புள்ளிகள் சரிந்து 9,990 புள்ளிகளில் வர்த்தகம் தொடங்கியுள்ளது.
  - அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு 16 மாதங்களில் இல்லாத அளவுக்கு கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ளது.
  - **செய்தி துளிகள்**:
    - கொரோனா வைரஸ் உலக தொற்று நோய் என்று உலக சுகாதாரத்துறை அறிவித்த நிலையில், பங்குச் சந்தைகள் கடும் சரிவுடன் வர்த்தகமாகின.

## திருக்குறள்

**குறள் எண் : 135**

குறள் பால் : அறத்துப்பால்

குறள் இயல் : இல்லறவியல்

குறள் அதிகாரம் : ஒழுக்கமுடைமை

**அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன்று இல்லை**

**ஒழுக்க மிலான்கண் உயர்வு.**

**விளக்கம்:** பொறாமையுடையவனிடம் செல்வம் நிற்காது போல், ஒழுக்கம் இல்லாதவனிடத்தில் உயர்ச்சி இல்லையாகும்.